08.04.2026.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.182/2018

**பி.வா.சா.3**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தனலட்சுமி | | |
| **க/பெ** | வீரராகவன் | **மதம்** | |
| **கிராமம்** | விழுப்புரம் | **தொழில்** | |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 54/ 2026 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 08.04.2026. |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 7-வது பிரதிவாதி. 6- வது பிரதிவாதி எனது மாமியார். 2- வது பிரதிவாதி எனது மகன். 8- வது பிரதிவாதி எனது மகள். நாங்கள் வீரராகவ செட்டியாருடைய தரப்பினர் ஆவோம். பாலகுருநாத செட்டியாரின் தரப்பினர்கள் பிரதிவாதிகள் 9, 10, 11 ஆகும். இலட்சுமணசாமி செட்டியார் தரப்பினர் பிரதிவாதிகள் 1, 4 ஆகும். அனந்தகிருஷ்ணன் தரப்பினர் வாதிகள் ஆகும். எங்கள் தரப்பில் நாங்களும், வாதிகளும் மற்றும் பிரதிவாதிகள் 1 மற்றும் 11 ஆகியோர்களுக்கிடையே பஞ்சாயத்தார் தலையீட்டின் படி சமரசமாகி நாங்கள் ஒரு சமரச மனுவினை தாக்கல் செய்துள்ளோம். அந்த சமரச மனுவில் கூறப்பட்டுள்ளவாறு B அட்டவனை சொத்து, வாதிகள் ஒரு தரப்பினராகவும், 2, 4 பிரதிவாதிகள் ஒரு தரப்பினரும் மற்றும் 9, 10, 11 பிரதிவாதிகள் ஒரு தரப்பினராகவும், ஒவ்வொரு தரப்பினருக்கும் தலா 1/ 3 பங்கு முதல்நிலை

தீர்ப்பாணை வழங்க பிரார்த்திக்கிறோம். அதுபோல ஏ அட்டவணை சொத்துளை 2, 8 - பிரதிவாதிகளுக்கு ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை வழங்க எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. புல எண். 160/2 25 சென்ட் நிலம் பொறுத்து வழக்கினை தள்ளுபடி செய்ய ஆட்சேபணை கிடையாது. நான் எனது மகன், மகள் மற்றும் மாமியாருக்காக இந்த வாக்குமூலம் அளிக்கிறேன். அவர்களும் இன்று இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.